சென்னை மேற்கு மாவட்டம், ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி 110 வது வார்டில் அமைந்துள்ள ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் தமிழ்நாடு அரசின் விலையில்லா மிதிவண்டி வழங்கும் திட்டத்தின் கீழ் மேல்நிலைக் கல்வி பயிலும் 150 மாணவர்களுக்கு மேயர் திருமதி ஆர். பிரியா விலையில்லா மிதிவண்டிகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட செயலாளர் நே. சிற்றரசு, துணை மேயர் மு.மகேஷ் குமார், சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் எழிலன் நாகநாதன், பகுதி கழக செயலாளர் வினோத் வேலாயுதம், வட்ட செயலாளர் தினேஷ் பிரபு, கல்வி அலுவலர் மற்றும் உதவிக் கல்வி அலுவலர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணிகை, அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலில் நடைபெற்ற ஆடி கிருத்திகை தெப்பத்திருவிழாவில் செய்தி மக்கள் தொடர்பு துறை சார்பாக அமைக்கப்பட்ட பல்துறை பணி விளக்க கண்காட்சியை மாவட்ட செயலாளர் திருத்தணி எஸ். சந்திரன் எம்.எல்.ஏ முன்னிலையில் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு.ஆர்.காந்தி திறந்து வைத்து, பார்வையிட்டார். உடன் தலைமை செயற்குழு உறுப்பினர் திருத்தணி எம்.பூபதி, நகர கழக செயலாளர் திருத்தணி வி.வினோத்குமார், ஒன்றிய செயலாளர் ஆர்த்தி ரவி, திருத்தணி நகர் மன்ற துணைத் தலைவர் ஆ.சாமிராஜ், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் கூ.பாபு, திருக்கோயில் அறங்காவலர்கள், பொதுமக்கள் மற்றும் பல்வேறு துறை அரசு அலுவலர்கள் உள்ளனர்.

தன்னாட்சி கல்லூரிகளில் மாதிரி பாடத்திட்டம்!

அந்தந்த கல்லூரி நிர்வாகம் முடிவு செய்து கொள்ளலாம்! -உயர்க்கல்வித்துறை அறிவிப்பு!

சென்னை,ஆக.11- உயர்கல்வித்துறை அமைச்சர் க.பொன்முடி, 26.08.2021 அன்று சட்டமன்றத்தில் அறிவித்தபடி, மாணாக்கர்களின் அறிவு, திறன், கற்றல் மற்றும் கற்பித்தல் முறைகளை மேம்படுத்தவும், அவர்களை போட்டித் தேர்வுகளுக்குத் தயார்படுத்தவும், தொழில் துறையின் தேவைகளை பூர்த்தி செய்யவும், அதன் மூலம் வேலைவாய்ப்புகளைப் பெருக்கவும் உயர் கல்வி நிறுவனங்களின் பாடத்திட்ட மறுசீரமைப்புப் பணி மேற்கொள்ளப்பட்டு, மாதிரி பாடத்திட்டங்கள் (Model Syllabus) உருவாக்கப்பட்டன.

மாணவர்களின் எதிர்கால நலன் கருதி, மாநிலத்திலுள்ள 90 சதவீத அரசு உயர்கல்வி நிறுவனங்கள் தங்கள் கல்லூரியின் தன்மைக்கேற்ப சில மாற்றங்களுடன் மாதிரிப் பாடத்திட்டங்களை நடைமுறைப்படுத்தியுள்ளன.

இந்நிலையில், மாதிரிப் பாடத்திட்டத்தின் நோக்கத்தினை விளக்க உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் 02.08.2023 அன்று சென்னை, அண்ணா பல்கலைக்கழகத்தில் அனைத்து தன்னாட்சிக் கல்லூரி முதல்வர்களுடன் கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்தில், இந்த புதிய மாதிரி பாடத்திட்டம் 70 சதவீத தன்னாட்சிக் கல்லூரிகளில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன என தெரிவிக்கப்பட்டது.

சில தன்னாட்சிக் கல்லூரிகள், அவர்களது கல்லூரியில் தற்போது கற்பிக்கப்படும் பாடத்திட்டம் சிறப்பாக உள்ளதாகவும், இந்த மாதிரி பாடத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதால் அவர்களது கல்லூரி தன்னாட்சியின் உரிமைக்கு பாதிப்பு ஏற்படும் எனவும் கருதுவதாக கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. தன்னாட்சிக் கல்லூரிகள் சார்பாக தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. இதன்படி, தன்னாட்சிக் கல்லூரிகள் இந்த புதிய மாதிரி பாடத்திட்டத்தினை தங்களது கல்லூரிகளில் நடைமுறைப்படுத்திக் கொள்வது குறித்து அவர்களே தங்கள் விருப்பத்திற்கேற்ப (Optional) முடிவு செய்து கொள்ளலாம் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

காலி மனை இடங்களை பதிவதில் புதிய நடைமுறை!

பதிவுத்துறை தலைவர் அறிவிப்பு!

சென்னை,ஆக.11- மனை இடங்கள் குறித்த ஆவணங்கள் சார்பதிவாளர்கள் அலுவலகங்களுக்கு பதிவிற்கு வரும்போது அவ்விடங்களில் கட்டடம் கட்டி முடிக்கப்பட்ட நிலையிலும் கட்டடம் குறித்த தகவல்களை ஆவணங்களில் குறிப்பிடாமல் அதனை காலிமனையிடமாகவே பதியும் நிலை தொடர்வதாக புகார்கள் வருகின்றன. இது அரசுக்கு வரும் வருவாயை பாதிப்பதாக உள்ளது. இதனை தவிர்க்கும் வகையில் புதிய அறிவுரை சார்பதிவாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. காலிமனை என குறிப்பிட்டு பதிவுக்கு வரும் ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பிரஸ்தாப இடத்தினை பதிவுக்கு முன்பாக புகைப்படம் எடுக்க வேண்டும். மேலும், இப்புகைப்படம் ஜியோ கோஆர்டினேட்ஸ் கொண்டதாகவும் இருக்க வேண்டும். இவ்வாறு எடுக்கப்படும் புகைப்படம் ஆவணத்தின் ஒரு பகுதியாக இணைக்கப்பட்டு தாக்கல் செய்யப்பட வேண்டும். இந்த நடைமுறை 16.08.2023 முதல் நடைமுறைக்கு வருகிறது.

காலிமனை என பதியப்படும் ஆவணங்கள் தொடர்பாக இந்த அறிவுரையைப் பின்பற்றாத சார்பதிவாளர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று பத்திரத்துறை தலைவரால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பல்லாவரம் தொகுதியில் இலவச மிதிவண்டி வழங்கல்!

12 - 10ஆம் வகுப்பில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவர்களுக்கு நிதியுதவி!

இ.கருணாநிதி எம்.எல்.ஏ. வழங்கினார்!

பல்லாவரம்,ஆக.11- அஸ்தினாபுரம் மாநகராட்சி மேல்நிலைப் பள்ளியில் விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் நிகழ்ச்சியில் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ. கருணாநிதி அவர்கள் கலந்து கொண்டு மாணவ மாணவிகளுக்கு தமிழக அரசின் விலையில்லா மிதிவண்டிகளை வழங்கினார் மேலும் பத்தாம் வகுப்பு பன்னிரண்டாம் வகுப்புகளில் பள்ளியிலேயே முதல் மூன்று இடங்களை பிடித்த மாணவ மாணவிகளுக்கு ரூபாய் 10,000 ரூபாய் 7000 ரூபாய் 5000. தனது சொந்த நிதியிலிருந்து மாணவ மாணவிகளுக்கு சால்வை அணிவித்து நிதி வழங்கி ஊக்குவித்தார்.

அடுத்த ஆண்டிலிருந்து 450 மதிப்பெண்கள் மேல் பெரும் அனைத்து மாணவ மாணவிகளுக்கும் சிறப்பு பரிசு நிதி உதவி வழங்கப்படும் என தெரிவித்து பள்ளியில் மாணவ மாணவிகளை அதிக மதிப் பெண் எடுக்க வைத்த 15க்கு மேல்பட்ட ஆசிரியர்களுக்கு சால்வை அணிவித்து கௌரவித்தார்.

இந்நிகழ்ச்சியில் பகுதி கழகச் செயலாளர் ஏ. கே. கருணாகரன், தலைமை ஆசிரியர் சந்திரன், மாமன்ற உறுப்பினர் சரண்யா மதுரை வீரன், பெற்றோர், ஆசிரியர், கழகத் தலைவர் எம். நாகராஜ், க. ரமேஷ், காரை செல்வராஜ், மதுரை வீரன், எம். இளவரசன், எச். பாஸ்கர், லோ.டில்லி, பாபு, பெற்றோர்கள் பள்ளி ஆசிரியர்கள் ஆகியோர் உடன் இருந்தனர்.

கே.எஸ்.எம். நாதன் ஏற்பாட்டில்! எழும்பூர் தெற்குப் பகுதி

58 அ வட்டத்தில் கலைஞர் நினைவு நாள்! உணவு வழங்கல்!

வி.சுதாகர் – ராஜேஸ்வரி ஸ்ரீதர் எம்.சி. பங்கேற்பு!

சென்னை,ஆக.11- சென்னை கிழக்கு மாவட்டம், 58 அ வட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞரின் நினைவு நாளை முன்னிட்டு தலைமைச் செயற்குழு உறுப்பினர் கே.எஸ்.எம். நாதன் ஏற்பாட்டில் கலைஞரின் திருவுருவப்படத்திற்கு மரியாதை செலுத்தி பொதுமக்களுக்கு உணவு வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு, சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர்-அமைச்சர் பி.கே. சேகர்பாபு, ஆலோசனைக்கிணங்க, எழும்பூர் தெற்கு பகுதி 58அ வட்டத்தில் ஜெர்மனியா ரோட்டில் தலைமை செயற்குழு உறுப்பினர் கே.எஸ்.எம்.நாதன் ஏற்பாட்டில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப்படத்திற்கு மலர் அஞ்சலி செலுத்தி உணவும் வழங்கப்பட்டது. எழும்பூர் தெற்கு பகுதிச் செயலாளர் வி.சுதாகர், ராஜேஸ்வரி ஸ்ரீதர் எம்.சி., எஸ்.ரசூல், எஸ்.ஜெகதீசன், வட்டக் கழக செயலாளர்கள் வி. விஜயகுமார், ஆர்.பாபு (எ) சந்திரசேகரன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.